# சங்க இலக்கியங்களில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

# ADMINISTRATIVE MANAGEMENT THEORIES IN SANGAM LITERATURE



பதிப்பாசிரியர்

**முனைவர் க. முருகேசன்**

சங்க இலக்கியங்களில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்




9 789385 267352

# சங்க இலக்கியங்களில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

**(தேசியக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர் | : | **முனைவர் க. முருகேசன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர் |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட், 2017 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் – 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 610 - 626 |
| விலை | : | உரூ. 400/– |

**ISBN : 978 - 93 - 85267 - 35 - 2**


# Administrative Management Theories in Sangam Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan** |
| Copyright's | : | Editor |
| First Edition | : | August, 2017 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 610 - 626 |
| Prize | : | **Rs. 400/-** |

16. **முனைவர் கோ. இராமச்சந்திரன்** 89
சங்க இலக்கியங்களில் நிர்வாக மேலாண்மை

17. **முனைவர் மு. நாகராஜன்** 95
நிர்வாகவியல் நோக்கில் செங்குட்டுவனின் புத்திக்கூர்மையும் பரணரும்

18. **முனைவர் ஆர். நிர்மலா தேவி** 101
இலக்கியங்களில் அரசனின் நிர்வாக நெறி

19. **முனைவர் அ. அருள்சீலி** 107
சங்க இலக்கியத்தில் நீர் மேலாண்மை

20. **இரா. சரஸ்வதி** 114
புறநானூறு உணர்த்தும் அரசியல் கோட்பாடுகள்

21. **முனைவர் சு. இராமதிலகம்** 121
சங்க இலக்கியத்தில் - அரசு நிர்வாகம்

22. **முனைவர் கோ. சுரேஷ்** 127
புறநானூற்றில் ஆட்சி நிர்வாகமும் போர் மரபுகளும்

23. **முனைவர் கூ. முத்தையன்** 134
சங்க இலக்கியத்தில் வணிக மேலாண்மை

24. **திருமதி. ஆ. தனுசு இராமச்சந்திரன்** 139
நற்றிணையில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

25. **முனைவர் நயம்பு. அறிவுடை நம்பி** 144
புறநானூற்றில் அரசு நிர்வாகவியல்

26. **முனைவர் சா. நீலகண்டன்** 151
பட்டினப்பாலையின் மேலாண்மைச் சிந்தனைகள்

27. **முனைவர் மு. பழனியப்பன்** 156
முல்லைப்பாட்டில் காணலாகும் மேலாண்மைச் செய்திகள்

28. **ம. காயத்ரி** 161
புறநானூற்றில் நேரமேலாண்மை

29. **முனைவர் ப. சுமதி** 166
பட்டினப்பாலை சுட்டும் நிர்வாகவியல் சிந்தனைகள்

30. **முனைவர் கடவூர் மணிமாறன்** 172
புறநானூறு புலப்படுத்தும் படைமறமும் கொடைத்திறமும்

31. **அ. காயத்ரி** 179
சங்க இலக்கியங்களில் போர் மேலாண்மை

32. **தி. முத்துலட்சுமி** 185
சங்க காலத்தில் அரசு நிர்வாகம்





33. **முனைவர் வி. வசுமதி** 192
புறநானூற்றில் நிர்வாகவியல்

34. **முனைவர் க. கலாவதி** 198
புறநானூற்றில் போர் நிர்வாகம்

35. **முனைவர் சு. சதீஷ்குமார்** 204
புறநானூற்றில் நாட்டு நிர்வாகம்

36. **க. சத்யா** 208
நற்றிணை காட்டும் நிர்வாகக் கூறுகள்

37. **நா. தீபா** 212
பட்டினப்பாலையில் நிர்வாகவியல் சிந்தனைகள்

38. **முனைவர் வே. வளர்மதி** 218
சங்க இலக்கியத்தில் இல்லற நிர்வாகம்

39. **ரெ. சுப்புலட்சுமி** 225
ஐங்குறுநூறு - வேட்கைப்பத்து வாழ்வியல் நெறிகள்

40. **ஜோ. ஜார்ஜ்** 232
புறநானூற்றில் நிர்வாகவியல் சிந்தனைகள்

41. **இரா. அனுராதா** 236
கபிலரின் புறநானூற்றுப் பாடல்களில் நிர்வாகவியல் சிந்தனைகள்

42. **திருமதி செள. சுருதி** 242
கரிகாலனின் வணிக மேலாண்மை

43. **த. இராகுல்காந்தி** 248
கலித்தொகையில் இல்லற நிர்வாகம்

44. **முனைவர் ம. அனுராதா** 254
புறநானூற்றின் போர் அறம்

45. **முனைவர் இரா. இரவிச்சந்திரன்** 259
புறநானூற்றில் மேலாண்மைச் சிந்தனைகள்

46. **சொ. இளங்கோ** 262
சங்க இலக்கியத்தில் மேலாண்மை

47. **முனைவர் மு. கவிதாதேவி** 268
நற்றிணைச் சமூகம் காட்டும் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

48. **து. இரம்யா** 274
புறநானூறு காட்டும் போர் மேலாண்மை

49. **மு. கார்த்திகேயன்** 280
அகநானூற்றில் நிர்வாகவியல் குறித்த பதிவுகள்

# 35. புறநானூற்றில் நாட்டு நிர்வாகம்

**முனைவர் சு. சதீஷ்குமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

நிர்வாகவியல் குறித்த கோட்பாடுகளை உருவாக்கியவர்களாக மேல்நாட்டாரையே பலரும் குறிப்பிடுகின்றனர். ஹென்றி ஃபாயேல் என்பவரை நிர்வாக மேலாண்மைக் கோட்பாட்டின் தந்தையாகவும் அவரைத் தொடர்ந்து லூதர் குல்லிக், வூர்விக், மூனி மற்றும் ரெய்லி ஆகியோர் இத்துறையின் முன்னோடிகளாகவும் திகழ்கின்றனர். மேனாட்டறிஞர் நிர்வாகவியல் குறித்த கோட்பாடுகளை வகுப்பதற்கு முன்பே சங்க இலக்கியப் புலவர் பெருமக்கள் தம் பாடல்களில் நிர்வாகவியல் குறித்த தெளிவான சிந்தனைகளைக் கற்றோர் போற்றும் வகையில் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள நாட்டு நிர்வாகம் குறித்த செய்திகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## அரசனின் நிர்வாகத் திறன்

கடற்கரையிடத்து உள்ள உப்பங்கழி நீரால் விளைந்த உப்பை எடுத்துக்கொண்டு மலைநாட்டை நோக்கி வண்டிகள் செல்கின்றன. அப்போது வண்டிகளின் சக்கரங்கள் மண்ணிற்குள் புதைந்தன. வண்டிகளை இழுத்துச் செல்லும் எருதுகளின் வேகம் தடைபட்டது. அவ் எருதுகள் தம் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தி வண்டிகளை இழுத்து முன்செல்கின்றன. இவ்வாறு செல்லும் எருதுகளை ஒத்தவன் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்ற உறையூர் மருத்துவன் தாமோதரனார் சோழ மன்னனின் திறத்தினைச் சிறப்பித்துள்ளார். இதனை,

***"கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்***
***ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும்***
***உரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்" (புறம்.பா. 60)***

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. இதேபோல் அதியமான் நெடுமானஞ்சியை, ஔவையார் பாடிய,

***"அச்சொடு தாக்கிப் பாருற் றியங்கிய***
***பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய***
***வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்***
***பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டே" (புறம்.பா.90)***

என்ற பாடலும் மேற்சுட்டிய கருத்துக்கு அரணாக அமைகின்றது. இதனால், அரசியலாகிய வண்டி தன்னை அழுத்தினாலும் அஞ்சாது தன் முழு வலிமையுடன் அரசன் முன்னேறுவான் என்பது புலனாகின்றது.

## அறங்கூறும் அவைகள்

பரந்து விரிந்த நாட்டின் ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் அரசன் ஒருவனால் மட்டுமே மேற்கொள்ள இயலாது. நாட்டில் நடைபெறும் வழக்குகள் அனைத்தையும் ஆராய்ந்து நீதி வழங்க அறங்கூறும் அவைகள்